கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Kanniya Road, Varothaya Nagar, Trincomalee

Our Ref:- NP/15/03/COOP CITY Your Ref:- 23 21 January 2009

சுற்றறிக்கை இல: 01/2009

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்

## அரசாங்கத்தின் 2009ம்ஆண்டு வரவு செலவுத்திட்ட யோசனைக்கமைவான சிறியசிறப்பு விற்பனை நிலையங்கள் அமைக்கும் வேலைத்திட்டம்

2009ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட யோசனைகளுக்கு அமைவாக நாடுமுழுவதும் 1000 சிறிய சிறப்பு விற்பனைநிலையம் அமைக்கும் திட்டத்தின் கீழ் தங்களால் சிபார்சு செய்யப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபா ஒரு மில்லியன் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்

1. தற்போது சங்கங்களால் செயற்படுத்தப்பட்டுவரும் கிளை விற்பனை நிலையங்களில் மூன்றினைத் தேர்ந்தெடுத்து அவற்றை புனரமைத்து சிறிய சிறப்பு விற்பனைநிலையமாக செயற்படுத்தல்.
2. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் ரூபா100000/= மூன்றுகிளைகளின் புனரமைத்தல் செலவுக்காக பயன்படுத்தமுடியும்.
3. மீதியாக உள்ள ரூபா900000/= ல் ரூபா 300000/= வீதம் ஒவ்வொரு சிறியசிறப்பு விற்பனை நிலையத்திற்குமான காசுப்பதிவு இயந்திரம் (Cash machine), இலத்திரனியல் தராசு (Electronic scale) மற்றும் ஏனைய தளபாட உபகரணங்களின் கொள்வனவிற்கு பயன்படுத்துதல் வேண்டும்.
4. 2008ம் ஆண்டில் சிறிய சிறப்பு விற்பனைநிலையம் அமைத்தலுக்கு பின்பற்றிய நடைமுறைகளே இச்செயற்பாட்டிலும் பின்பற்றப்படல் வேண்டும்.
5. இவ்வேலைத்திட்டம் 2009ம் ஆண்டு தமிழ் சிங்கள புத்தாண்டிற்கு முன்பு பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.
6. 2009ம் ஆண்டு தேசியதிறன் அபிவிருத்திப் போட்டியின் போது Co-op city செயற்பாடுகளின் முன்னேற்றமே கவனத்திற்கொள்ளப்படும் என்பதை சங்கங்களிற்கு தெரியப்படுத்தவும்.
7. தளபாட உபகரணங்களின் கொள்வனவு மற்றும் புனரமைத்தல் என்பனவற்றிற்கு இந்நிதியைச் செலவிடும் போது அரசாங்கத்தின் பெறுகை கையேட்டில் உள்ள அறிவுறுத்தலுக்கமைய (Procurement Policy of Government) நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.
8. தொடர் இலாபத்தில் செயற்படும் Co-op city நிலையத்தைக் கொண்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களே சிறிய சிறப்பு விற்பனைநிலையம் அமைக்கும் வேலைத்திட்டத்துக்கு முதலில் சிபாரிசு செய்யப்படல் வேண்டும்.

☏-CCD & RCS – 060 2264646 Gen – 060 2264645 Fax – 026 2226951/4/6/7 – Ext - 241
E- mail :- ccdnp@mail.com

9. சிறிய சிறப்பு விற்பனை நிலையம் அமைப்பதற்கான கிளைகள் தெரிவு செய்யப்படும் போது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்படும் போது சிறிய சிறப்பு விற்பனைநிலையம் அமைக்க இருக்கும் கிளைநிலையத்தின் விற்பனை சுழற்சி, சிறிய விற்பனைநிலையம் அமைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விற்பனை சுழற்சி அப்பிரதேச மக்களின் தேவைப்பாடு, பயன்பாடு, கட்டடவசதி என்பனவற்றை உள்ளடக்கிய சாத்தியக்கூற்றறிக்கை கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். சாத்தியக்கூற்றிக்கையின் பிரதியொன்று எனக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ஆ.சுப்பிரமணியசர்மா

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்

கூட்டுறவுச் சங்கப்பதிவாளரும் (வமா)

பிரதி : செயலாளர், உள்ளூராட்சி, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு கூட்டுறவு அமைச்சு — தகவலுக்காக